சிறப்பான இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாகப் பல்வேறு திட்டங்களை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் விலைவாசியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும். பொதுமக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய இன்னும் பல்வேறு திட்டங்களை நீங்கள் உருவாக்க வேண்டும் என்பதைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.—

ஏதுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள்; ஏனைய தாள்கள்.—

1. 1992—93 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 62 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (62 புத்தகங்கள்).

2. 1992—93 ஆம் ஆண்டிற்கான கடன் செலவுகள் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

3. 1992—93 ஆம் ஆண்டிற்கான பொதுக்கடன்—திருப்பிச் செலுத்துதல் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

4. 1992—93 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்—பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

5. 1992—93 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 39—சாலைகள், பாலங்கள் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

6. 1992—93 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 56—பொதுப்பணிகள்— கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).